

தென் மாவட்டங்களில் இயல்பைவிட அதிகமாக கனமழை பெய்த காரணத்தால், தூத்துக்குடி மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தூத்துக்குடி மாநகரில் நடைபெற்று வரும் மீட்பு பணிகளை நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். தூத்துக்குடி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அருகில் வெள்ளம் சூழ்ந்த பகுதியை பார்வையிட்டு, தண்ணீரை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கீதாஜீவன், ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் உள்ளிட்டோர், அப்போது உடனிருந்தனர்.



நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்தில் மழைநீர் புகுந்துள்ள நிலையில் அதன் பாதிப்பை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.மழை நீரை அகற்ற அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், சா.ஞானதிரவியம் எம்.பி. உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





